TNED140044032024

Presented on : 16-11-2024
Registered on : 16-11-2024
Decided on : 10-07-2026
Duration : 1 years, 7 months, 24 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை**: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,
நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 26ம் நாள்
2026ம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.98/2024**

மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
ஆப்பக்கூடல் காவல் நிலையம்,
ஆப்பக்கூடல்.
(குற்ற எண். 59/2024). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. தமிழ்செல்வன் (22/2024), த/பெ. குருசாமி
2. விஜய் (நந்தராஜ்) (24/2024), த/பெ. சரவணன்
3. முருகானந்தம், த/பெ. பழனிச்சாமி ... எதிரிகள்

**Case Summary**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் உதவி ஆய்வாளர்,<br>ஆப்பக்கூடல் காவல் நிலையம்,<br>ஆப்பக்கூடல்.<br>(குற்ற எண். 59/2024). |
| 2. | எதிரிகள் பெயர் | 1. தமிழ்செல்வன் (22/2024), த/பெ. குருசாமி<br>2. விஜய் (நந்தராஜ்) (24/2024), த/பெ. சரவணன்<br>3. முருகானந்தம், த/பெ. பழனிச்சாமி |
| 3. | எதிரிகள் முகவரி | A1, A3 – இந்திரா நகர் காலனி, ஒரிச்சேரி, பவானி வட்டம், ஈரோடு மாவட்டம். |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:27 +0530

<table>
<tr><td></td><td></td><td colspan="3">A2 – 9, பெருமாள்பாளையம் புதூர், தளவாய்பேட்டை, ஈரோடு மாவட்டம்.</td></tr>
<tr><td>5.</td><td>குற்ற நிகழ்வு நாள்</td><td colspan="3">22.02.2024</td></tr>
<tr><td>6.</td><td>புகார் தேதி</td><td colspan="3">02.03.2024</td></tr>
<tr><td>7.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி</td><td colspan="3">A1 – 02.03.2024, A2–04.03.2024</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">A1 – 25.04.2024, A2 – 26.03.2024, மேலும், 3ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.</td></tr>
<tr><td>9.</td><td>பிரிவு கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Bail Order in Crl.MP 1346/2024 is allowed on 23.04.2024 on the file of the Hon'ble Principal District Session Court, Erode.<br>Bail Order in Crl.MP 1378/2024 is dismissed on 03.04.2024<br>Bail Order in Crl.MP 1316/2024 is allowed on 20.03.2024<br>Condition Relaxation petition in CMP.No.2025/2024 is allowed on 06.05.2024</td></tr>
<tr><td>10.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td rowspan="8">11.</td><td rowspan="8">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>17.03.2026</td><td>17.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>17.03.2026</td><td>17.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>15.04.2026</td><td>15.04.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>15.04.2026</td><td>15.04.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>11.05.2026</td><td>11.05.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">25.06.2026</td></tr>
<tr><td>13.</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td colspan="3">10.07.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">10.07.2026</td></tr>
<tr><td>15</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 18.01.2024ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:32 +0530

குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II திருமதி. P.கயல்விழி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் செல்வி. கே.விஜயலட்சுமி அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 22.02.2024ம் தேதி 16.00 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரிச்சேரிபுதூர் TELCOM QUARTERS வீதியில் உள்ள BSNL STAFF QUARTERSல் 1 முதல் 3 வரையான எதிரிகள் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான TELECOM QUARTERSக்குள் குற்றம்முறு நோக்கத்துடன் நுழைந்து கேட்வால்களுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவற்றை நேர்மையின்றி திருடிச்சென்றுள்ளனர் என்றும், எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுக 380ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, ஆப்பக்கூடல் காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 380ன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்கள்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:34 +0530

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

கடந்த 22.02.2024ம் தேதி 16.00 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரிச்சேரிபுதூர் TELCOM QUARTERS வீதியில் உள்ள BSNL STAFF QUARTERS ல் 1 முதல் 3 வரையான எதிரிகள் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான TELECOM QUARTERSக்குள் குற்றம்முறு நோக்கத்துடன் நுழைந்து கேட்வால்களுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவற்றை நேர்மையின்றி திருடிச்சென்றுள்ளனர்.

4.2 கடந்த 02.03.2024–ம் தேதியன்று 13.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு என்பவர் நிலைய அலுவலகத்தில் இருந்த பொழுது BSNL நிறுவனத்தின் வட்ட பொறியாளர் பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 59/2024, இ.த.ச பிரிவுகள் 380ன் கீழ் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற அ.சா.7 திரு. சின்னச்சாமி காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று, சம்பவ இட சாட்சிகளான குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், அ.சா.ஆ.8மாதிரி வரைபடமும் தயார் செய்தார்.

4.3 பின்னர் சாட்சிகள் பழனிச்சாமி, கோவிந்தசாமி, ஜெகதீஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், தனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மையென தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 02.03.2024 ஆம் தேதியன்று தளவாய்பேட்டை, நால்ரோடு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, பவானி மெயின் ரோட்டில் மூன்று நபர்கள் கையில் இரண்டு பைப்புகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்றும், அவர்களை விசாரித்த போது இரண்டு நபர்கள் தப்பி ஓடி விட்டார்கள் என்றும், இந்த வழக்கின் எதிரி தமிழ்ச்செல்வன் என்பவர் மட்டும் மாட்டிக் கொண்டார். அவரை அன்றைய தினம் 3 ½ மணிக்கு கைது செய்தும்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.10 18:13:38 +0530

அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை அழைத்துக்கொண்டு சென்றால், தான் மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு கூட்டி சென்று நாம் அடையாளம் காட்ட, வாழ்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகள் மற்றும் இரும்பு கதவுகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்பது மட்டும் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அழைத்துச் சென்ற ஓரிச்சேரி புதூர், இந்திரா நகர் எதிரில் உள்ள மழை நீர் குட்டை அருகில் உள்ள செடி புதரில் மறைத்து வைத்திருந்த அ.சா.பொ.1 கேட்வால்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் கூடிய வாழ்வுகள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரண்டு, துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உடையதும் மற்றும் அ.சா.பொ.2 இரண்டு இரும்பு கதவுகளை எதிரி தமிழ்செல்வன் எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் தான் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும், பின்னர், எதிரியை தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.10 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், சாட்சிகள் குமாரசாமி, வெங்கடேஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.4 மேலும், மற்ற இரண்டு எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 04.03.2024 ஆம் தேதியன்று ஓரிச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி விஜய் என்பவரை தகவலாளி அடையாளம் காட்ட போலீஸ் பார்ட்டியை பார்த்ததும் தப்பிச் செல்ல முயன்றவரை பிடித்து விசாரித்தபோது, முன்னுக்குப் பின் முரணாக கூறியவர் பின்னர் தனது பெயர் விஜய் என்கிற நடராஜ் என்றும், தனது முகவரியையும் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு U/S. 41(A) Cr.P.C கீழ் அறிவிப்பு சார்பு செய்தும், பின்னர் எதிரியை கைது செய்வதற்கான காரணம் கூறி கைது செய்தும், அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கிருந்த சாட்சிகளான சம்பத் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தோம் என்றும், அவரை தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும்,



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:41 +0530

பின்னர் சாட்சிகள் பாலசுப்பிரமணியம் மற்றும் சம்பத் ஆகிய அவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், 15.04.2024 ஆம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவியாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் மூன்றாம் எதிரியான முருகானந்தத்தை தேடி வந்தும், அவர் கிடைக்கவில்லை அதனால் அவரை தலைமறைவு எதிரி எனக் குறிப்பிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 15.04.2024 ஆம் தேதியன்று எதிரிகள் மூவர் மீதும் இ.த.ச பிரிவுகள் 380ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிகளை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்று கூறினார்கள். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார்கள். எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்கள்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவு 380ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

7.1 கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 22.02.2024ம் தேதி 16.00 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரிச்சேரிபுதூர் TELCOM QUARTERS வீதியில் உள்ள BSNL STAFF QUARTERS ல் 1 முதல் 3 வரையான எதிரிகள் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான TELECOM QUARTERSக்குள் குற்றம்முறு நோக்கத்துடன் நுழைந்து கேட்வால்களுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவற்றை நேர்மையின்றி திருடிச்சென்றுள்ளனர்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:45 +0530

7.2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், அரசுத்தரப்பில் சாட்சிகள் அனைத்தும் அரசுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

8. குற்ற வழக்குகளில், அரசு தரப்பு தாம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாலேயே அவர் குற்றவாளி ஆகிவிடமாட்டார். குற்றச்சாட்டை ஆதரிக்கும் நம்பகமான, ஒருமித்த மற்றும் சட்டபூர்வமான சாட்சியங்கள் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். மேலும், சாட்சியங்களில் சந்தேகம் அல்லது முரண்பாடு இருந்தால் அதன் பயன் எதிரிக்கே வழங்கப்பட வேண்டும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். மேலும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி, ஒரு குறிப்பிட்ட உண்மையை நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) அந்த உண்மையை கூறுகின்ற தரப்பினரிடமே உள்ளது. குற்ற வழக்குகளில் எதிரி குற்றம் செய்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டிய கடமை முழுமையாக அரசு தரப்பினரிடமே உள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

## 9. பிரிவு 380 இந்திய தண்டனைச் சட்டம்

எந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கலம் மக்கள் குடியிருப்புக்காக அல்லாது சொத்தின் பாதுகாப்பிற்காக உபயோகப்படுத்தப்படுகிறதோ, அந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கலம் எதிலிலும் திருட்டை செய்கிற எவரொருவரும், ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

9.1. இவ்வழக்கில் திருடுபோனதாக சொல்லப்பட்டுள்ள தேதி 22.02.2024 புகார்மனுவானது சம்பவம் நடந்த 8 நாட்கள் கழித்து 02.03.2024 ம் தேதி



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.10 18:13:48 +0530

கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும்போது சம்பவமானது 22.02.2024 அன்று நடைபெற்றுள்ளதை அறியமுடிகிறது. இவ்வழக்கில் ஓரிச்சேரிபுதூர் TELCOM QUARTERS வீதியில் உள்ள BSNL STAFFல் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான TELECOM QUARTERSக்குள் குற்றம்முறு நோக்கத்துடன் நுழைந்து கேட்வால்களுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவற்றை எதிரிகள் நேர்மையற்ற முறையில் எடுத்துள்ளாரா என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

9.2 மேற்படி இரண்டு சட்டப்பிரிவுகள் தொடர்பான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலிக்கையில், அ.சா.1 பழனிச்சாமி தான் கடந்த 7 வருடமாக பவானி BSNL தொலைபேசி அலுவலகத்தில் சப் டிவிஷனல் இன்ஜினியராக பணிபுரிந்து வருவதாகவும், BSNL நிறுவனத்திற்கு சொந்தமான பணியாளர்களின் குடியிருப்பிடம் ஓரிச்சேரி புதூர் பகுதியில், டெலிகாம் குவாட்டர்ஸ் வீதியில் உள்ளதாகவும், கடந்த 22.02.2024 ஆம் தேதியன்று மாலை 4.00 மணியளவில் BSNL ஸ்டாப் குவாட்டர்ஸ் அருகில் வசித்து வரும் கோவிந்தசாமி என்பவர் தனது மொபைல் போனுக்கு தொடர்பு கொண்டு BSNL ஸ்டாப் குவாட்டர்ஸிலிருந்து சத்தம் வருவதாக கூறியும், தான் அங்கு நேரில் சென்று BSNL ஸ்டாப் குவாட்டர்ஸ் உள்ளே சென்று பார்வையிட்டதில் இருசக்கர வாகன பார்க்கிங் செட், இரும்பு கதவு இரண்டும் செப்டிக் டேங்க் மற்றும் செப்டிக் டேங்க் பைப் லைன் மூடிகள் பத்தும் குடியிருப்பிட மாடியில் உள்ள சின்டெக்ஸ் வாட்டர் டேங்கில் இருந்து வீடுகளுக்கு செல்லும் பைப் லைன் சுமார் 200 அடி காணாமல் போனது தெரியவந்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், அ.சா.1யை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

9.3 மேற்படி அ.சா.1 சாட்சியத்தை பரிசிலினை செய்கையில் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான TELECOM QUARTERSக்குள் கேட்வால்களுடன் கூடிய இரும்பு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.10 18:13:52 +0530

பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவை காணாமல்போனது பற்றி சாட்சியமளித்துள்ளார். ஆனால், எதிரிகளை குற்றத்துடன் தொடர்புபடுத்தி எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. பொதுவாக திருட்டு சம்மந்தமான குற்றங்கள் சூழ்நிலை சாட்சியங்கள் அல்லது நேரடி சாட்சியங்கள் மூலம் நிருபிக்கலாம். ஆனால் இவ்வழக்கில் நேரடி சாட்சியங்கள் என்று யாரையும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

9.4 மேற்படி ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரிச்சேரிபுதூர் TELCOM QUARTERS வீதியில் உள்ள BSNL STAFF QUARTERSல் குற்றம்முறு நோக்கத்துடன் நுழைந்து கேட்வால்களுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்கள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உள்ளது மற்றும் இரும்பு கதவுகள் – 2 ஆகியவற்றை 1 முதல் 3 எதிரிகள் நேர்மையற்ற முறையில் அவருக்கு ஆதாயம் ஏற்படும் வகையிலோ? அல்லது மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்தும் உட்கருத்துடன் நேர்மையற்ற வழியில் செய்துள்ளாரா? என்பதை பரிசீலித்து பார்க்கும்போது இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அ.சா.4 குமாரசாமி, அ.சா.5 வெங்கடேஷ்வரன் மற்றும் அ.சா.6 பாலசுப்பிரமணியம் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டார்கள்.

9.5 குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் சொல்லும் தன்மை குறித்து காண இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவுகள் 24, 25, 26 மற்றும் 27 ஆகியவற்றை காண வேண்டும். இந்திய சாட்சியச்சட்டம் 1872 பிரிவு 25 மற்றும் 26 முறையே காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும், காவல் துறையினரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும் அது எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்த இயலாது. ஆனால் பிரிவு 27ன் படி ஏதேனும் சங்கதி அல்லது தகவல் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது புதிதாக தெரியவந்தால் அது ஒப்புதல் வாக்குமூலமாக இருந்தாலும் அதனை எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்க இயலும் பயன்படுத்தலாம்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:13:54 +0530

9.6 இதில் அ.சா.4 குமாரசாமி, அ.சா.5 வெங்கடேஷ்வரன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், தேதி, மாதம் நினைவில்லை, கடந்த 2024 ஆம் வருடம் ஒரு நாள் மதியம் 12.00 மணிக்கு மேல் தாங்கள் இருவரும் ஒரிச்சேரிப்புதூர் பிரிவு அருகில் சென்று கொண்டிருந்தபொழுது அங்கு போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அருகில் சென்று கேட்டபொழுது திருட்டு போனது தொடர்பாக விசாரித்து கொண்டிருப்பதாக கூறியும், பின்னர் போலீசார் திருட்டு நடைபெற்ற இடத்தில் விசாரித்து படம் வரைந்து தங்களிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால் தாங்கள் இருவரும் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பின்னர் அன்றைய தினம் மாலையில் போலீசார் மீண்டும் தங்கள் இருவரையும் அழைத்து டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் திருட்டுப்போன பொருட்கள் இந்திரா நகர் அருகில் உள்ள ஒரு புதருக்கடியில் உள்ளதாகவும், அங்கு இரண்டு இரும்பு கதவுகள் எல் ஷேப் இரும்பு பைப்பு ஒன்று துண்டு பைப்புகள் ஆகியவை அங்கு உள்ளதாகவும், அவற்றை தாங்கள் சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்றும் போலீசார் அழைத்ததின் பேரில் தாங்கள் இந்திரா நகருக்குச் சென்றோம். அங்கு போலீசார் எங்கள் முன்னிலையில் இரும்பு கதவுகள் மற்றும் இரும்பு பைப் ஆகியவற்றை கைப்பற்றி தங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், மேற்படி எதிரி தமிழ்செல்வன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரது கையொப்பம் மட்டும் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது. எதற்காக தாங்கள் அந்த கையொப்பம் செய்தேன் என்ற விபரமும் தங்களுக்கு தெரியாது என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர். அரசுத்தரப்பில் நீதிமன்ற அனுமதியுடன் குறுக்குவிசாரனை செய்தும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

9.7 அ.சா.6 பாலசுப்பிரமணியம் தனது சாட்சியத்தில், சுமார் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் ஒரிச்சேரி புதூர் பேருந்து நிறுத்தம் அருகில் வந்து கொண்டிருந்தபோது, அங்கு போலீசார் பிஎஸ்என்எல் போன்ற சில பொருட்கள் திருட்டுபோனது தொடர்பாக விசாரித்துக் கொண்டிருந்தபோது, விஜய் என்ற நடராஜன்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.10 18:13:58 +0530

என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் தன் முன்னிலையில் அளித்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சாட்சி கையப்பம் செய்ததாகவும், எதிரி விஜய் என்கின்ற நடராஜனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.6ன் சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டுள்ளாகவும், விஜய் என்கின்ற நடராஜனை தனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும் என்றும், தற்போது அவர் நீதிமன்றத்தில் முன்னிலையில் இல்லை என சாட்சியமளித்துள்ளார்.

9.8. மேற்படி சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கையில், மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்டா என இந்நீதிமன்றம் சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்ற சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.6 மேற்படி ஆவணத்தின் உள்ளடக்கத்தை தெரியாமல் கையொப்பம் செய்திருப்பது எதிரிகள் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தாரா என இந்நீதிமன்றத்திற்கு சந்கேதம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும் மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான சம்பத் என்பவரை அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. முன்னிலைபடுத்தாதற்கான காரணமும் அரசு தரப்பில் கூறவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

9.9 மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை அழைத்துக்கொண்டு சென்றால், தான் மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு கூட்டி சென்று நாம் அடையாளம் காட்ட, வாழ்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகள் மற்றும் இரும்பு கதவுகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என சாட்சியமளித்துள்ளார். ஆனால், தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் CCTV கேமராக்கள் எதுவும் உள்ளது என்றால் சரிதான். ஆனால், மேற்படி CCTV பதிவுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பதும்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:14:01 +0530

இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.7 சாட்சியமும் இந்நீதிமன்றம் நம்பும் வகையில் அமையவில்லை.

10. இந்திய சாட்சிய சட்டமானது பிரிவு 3ல் நிருபித்தல் என்பதை நீதிமன்றம் தன் முன்னுள்ள விஷயங்கள் அனைத்தும் பரிசீலித்த பின் அல்லது கருத்தில்கொண்டு சாதாரண விவேகமுள்ள அல்லது அறிவுடைய மனிதன் வழக்கின் சூழ்நிலையில் அது இருக்கிறது அல்லது இருக்க சாத்தியமாக உள்ளது என கருதி செயல்பட்டால் நீதிமன்றம் முன் நிரூபணம் செய்யப்பட்டது என்று கூறுகிறது. மேற்படி சாதாரண விவேகமுள்ள மனிதனின் நிலையிலிருந்து இந்த வழக்கில் முன்னிடப்பட்டுள்ள விஷயங்கள் (matters) பரிசீலித்து வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**2021-1L.W.(Crl.) 418**

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.Marimuthu @ Samikannu and one another Vs Inspector of Police, Karur கீழ்க்கண்டவாறு வழங்கியது,**

**Evidence Act:** Section 27, recovery, confession, reliance - Arrest, confession and recovery – No material to connect accused with alleged recovery – confession not proved – Prosecution failed to prove recovery of chain.

11. மேலும் மேற்கண்ட முன் தீர்ப்புரையின் அடிப்படையிலும், எதிரிகளை இவ்வழக்கில் தொடர்புபடுத்த எவ்வித சாட்சியமும் இல்லை என்பதாலும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு கொடுத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. முடிவாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட **இ.த.ச. பிரிவு 380ன்** படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து **கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்** கீழாக விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:14:05 +0530

13. இவ்வழக்கில் PR.No.150/2024ல் கைப்பற்றிய வழக்கச் சொத்துக்களான கேட்வால்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் வால்வுகள் இல்லாத ட வடிவ மற்றும் நீளமான துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடையுள்ளவற்றையும், இரும்பு கதவுகள் இரண்டு ஆகியவற்றையும் மேல்முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் வழக்குச் சொத்தின் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், தவறும் பட்சத்தில் அரசுடமையாக்க உத்தரவிடப்படுகின்றது. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:14:08 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**பவானி.**

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.பழனிச்சாமி | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.கோவிந்தசாமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.ஜெகதீஸ்வரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.குமாரசாமி | ஒப்புதல்வாக்குமூல சாட்சி |
| அ.சா.5 | திரு.வெங்கடேஷ்வரன் | ஒப்புதல்வாக்குமூல சாட்சி |
| அ.சா.6 | திரு.பாலசுப்பிரமணியம் | ஒப்புதல்வாக்குமூல சாட்சி |
| அ.சா.7 | திரு.சின்னச்சாமி | காவல் உதவி ஆய்வாளர் |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.03.2024 | புகார் மனு. |
| அ.சா.ஆ.2 | 02.03.2024 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.3 | 02.03.2024 | கைப்பற்றுதல் மகஜர். |
| அ.சா.ஆ.4 | 02.03.2024 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 கையொப்பம் மட்டும். |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 02.03.2024 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5 கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.6 | 02.03.2024 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6 கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.7 | 02.03.2024 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.8 | 02.03.2024 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.9 | 02.03.2024 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.சா.ஆ.10 | 02.03.2024 | படிவம் 91. |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>: –**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | கேட்வால்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் கூடிய வாழ்வுகள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரண்டு, துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உடையது. |
| அ.சா.பொ.2 | இரண்டு இரும்பு கதவுகள். |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u>** – இல்லை –

**<u>குறிப்பு:</u>**

1. 1, 2 எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் உள்ளனர். 3 ம் எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.10 18:14:14 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**